**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண். 6/2018**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஜெயராமன் | மதம் | : |
| த/பெ | : மாரப்பன் நாயுடு | ஜாதி | : |
| வயது | : | கிராமம் | : |
| தொழில் | : | வட்டம் | : |

**06.08.2024**
**வா.சா. 1 ன் முதல் விசாரணை**

**1.** நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். வாதி தரப்பு 1ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது பிரமாண வாக்குமூலத்தை நான் தமிழில் தாக்கல் செய்கிறேன். நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் பிரமாண வாக்குமூலத்தை தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்குத் தெரியும். 17.02.2017ம் தேதியிட்ட தான செட்டில்மெண்ட் ஆவணம் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(செட்டில்மெண்ட் ஆவணம் வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

2. பட்டா எண்.240ல் என் பெயரில் உள்ள கணினி பட்டா இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(பட்டா வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** என் சித்தி அஞ்சம்மாள் பெயரில் பட்டா எண்.23ல் உள்ள கணினி பட்டா இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(பட்டா வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** தாவா சொத்திற்கான வில்லங்க சான்று இணைய வழி நகல் தாக்கல் செய்கிறேன். **(வில்லங்க சான்று வா.சா.ஆ 4**

**ஆக குறியீடு செய்யப்படுகிறது)** தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார். ( **நீதிமன்ற ஆணையர் அறிக்கை நீ.சா.ஆ 1 ஆகவும் வரைபடம் நீ.சா.ஆ 2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**

(முதல் விசாரணை தொடர்ச்சி ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)